# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 25th April 1962.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Code of conduct for political parties (elections)*

* 4 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the steps taken to implement the code of conduct for political parties in connection with the third general elections, adopted at the meeting of all the political parties held on 20th December 1961;

(*b*) whether complaints were received by the Government from the opposition parties containing allegations against the ruling party; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The implementation of the various provisions of the code of conduct was a moral obligation on the part of the political parties who agreed to it. In so far as the Government was concerned, necessary instructions were issued to all the subordinate authorities for the strict implementation of those provisions relating to the Government.

(*b*) Complaints were received from the opposition parties against the ruling party as well as from the ruling party against opposition parties.

(*c*) A full investigation of the complaints was undertaken in cases where the complaint related to the non-fulfilment of the provisions of the code on the part of the Government. In other cases of complaints of breach of code by the ruling party as also by the other parties, no action could possibly be taken by the Government, as there was no provision for taking any action under the law.

**SRI M. KALYANASUNDARAM :** வலிய பல கட்சிகள் ஒன்று சேர்ந்து நிறைவேற்றிய சட்டத்தைவிட இது புனிதமானது என்று நினைக்கிறேன். ஆகையால் சம்பந்தப்பட்ட கட்சிகள் எல்லாம்

[25th April 1962

இதை நிறைவேற்ற கடமைப்பட்டு இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இந்தக் கமிட்டியிடம் புகார் தெரிவித்தபோது இந்த கமிட்டி ஏன் கூடவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்வதை எல்லாம் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இது புனிதமானதுதான், நிறைவேற்ற வேண்டியதுதான். இந்தக் கமிட்டி எவ்வாறு கூடவேண்டுமென்று நிர்ணயிக்காத காரணத்தினால்தான் இது கூடவில்லை.

SRI V. SANKARAN : ஆளும் கட்சியினரிடமிருந்து எதிர்க் கட்சிகளைப்பற்றி அதிகமாக புகார்கள் அரசாங்கத்திற்கு வந்தது என்று சொல்வது வாஸ்தவமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு தரப்பிலிருந்தும் புகார் வந்தது என்று முன்னமே சொன்னேன். இதில் எந்த கட்சியிலிருந்து அதிகமாக புகார்கள் வந்தன என்று சொல்வதற்கில்லை.

SRI T. L. SASIVARNA THEVAR : ஏதாவது புகார் வந்தால் அதை விசாரிப்பதற்காக இந்தக் கமிட்டி நியமிப்பபதாகச் சொன்னார்கள். அப்படி இப்போது புகார்கள் வந்திருக்கும்போது ஏன் அந்தக் கமிட்டி கூடக்கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேர்தல் எல்லாம் முடிந்துவிட்டது. இதற்குமேல் வேறு ஏதாவது கவனிக்கவேண்டுமென்றால் பின்னால்தான் யோசிக்கவேண்டும். அந்தக் கமிட்டி இப்போது இல்லை.

SRI M. KALYANASUNDARAM : இந்தக் கமிட்டியைக் கூட்டத் தயங்குவதற்கு முக்கியமாக அவர்களைப்பற்றி குற்றச்சாட்டுகள் அதிகமாக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்திருக்கின்றன என்பதுதான் காரணமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கமிட்டியைக் கூட்டுவதற்கு அமைச்சர் குழு தயங்குகிறது என்று சொல்லுவது எல்லாம் கனம் அங்கத்தினர் பேசுகிற வழக்கம். குத்தலாக பேசுவதுதான் அவர் வழக்கம். ஆனால் அமைச்சர் குழு இந்த விஷயத்தில் தயங்குவதற்கு அவசியமில்லை. நான் முன்னமே சொன்னேன் அரசாங்கத்திடம் வருகின்ற புகாருக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டுவருகின்றதென்று. ஒரு முறை இந்தக் கமிட்டி கூடவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன்பேரில் இந்தக் கமிட்டி கூட்டப்பட்டது. அப்போது இந்தக் கமிட்டியின் தலைவராக இருந்த அப்போதைய நிதி அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். ஆனால் இரண்டே இரண்டு அங்கத்தினர்கள் தான் வந்தார்கள். மற்ற அங்கத்தினர்கள் வரவில்லை.

25th April 1962]

**PULAVAR K. GOVINDAN :** பணத்தைக்காட்டி வோட்டுகள் கேட்கக்கூடிய முறை தேர்தலிலே கையாளப்பட்டது. இதைப் பற்றி விசாரணை செய்ய ரகசிய ஒற்றர்களை அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** பகிரங்கமாக பொதுக்கூட்டத்தில் இதைப்பற்றிப் பேசும்போது இதற்கு ரகசிய விசாரணை அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

**SRI M. KALYANASUNDARAM :** இந்தக் குழுவை நியமிப் பதற்கு அரசாங்கமே உத்திரவிட்டது. அதாவது ஜி.ஓ. நெ. 1933, பப்ளிக் எலெக்ஷன், தேதி 21—11—1961 பிரகாரம் டிசம்பர் 15-ம் தேதிக்குப் பிறகு அமைச்சர்கள் சர்க்கார் சம்பந்தம் இல்லாத எந்தப் பொது விழாவிலும் கலந்துக்கொள்ளக் கூடாது. அப்படி யிருக்க பல விழாக்களிலே முதல் அமைச்சர், இப்போது இருக்கிற நிதி அமைச்சர், பழைய நிதி அமைச்சர் எல்லோரும் கலந்துகொண்டார்கள் என்ற புகார் எழுத்து மூலமாக அரசாங்கத் திற்கு வந்ததா ? அதன்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் அங்கத் தினர் குறிப்பிட்டது இதுதான் என்று நினைக்கிறேன்.

'(1) The Government, while taking measures to maintain law and order, will take care not to impose undue restrictions on civil liberties and will not employ such measures as would interfere with a satisfactory election campaign by the parties.

(2) The ruling party will ensure that no cause is given for any complaint that it has used its official position for the purposes of its election campaign.'

இந்த இரண்டு விதிகளும் முற்றிலும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன. அப்போதைக்கப்போது புகார்களை விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டன.

**SRI M. KALYANASUNDARAM :** கனம் அமைச்சர் அவர்கள் 11, 12 பிரிவுகளை வாசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் அந்தப் பிரிவில் டிசம்பர் 15-ம் தேதிக்கு அப்பால் அமைச்சர்கள் எந்தப் பொதுவிழாவிலும் கலந்துக்கொள்ளக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கலந்துக்கொள்ளக் கூடாது என்பதல்ல, கலந்துக்கொள்ளமாட்டார்கள்.

**SRI M. KALYANASUNDARAM :** இந்தக் கமிட்டியின் தலைவர் மத்திய அரசாங்கத்தின் அமைச்சராகிவிட்டதினால், இந்தக் கமிட்டி கூடுவதற்கில்லையா அல்லது வேறு ஏதாவது காரணமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** தேர்தலுக்குப் பிறகுதான் இந்தக் கமிட்டியின் தலைவர் மத்திய அரசாங்கத்தின் அமைச்சரானார். அதற்கு முன்பே இந்தக் கமிட்டியிடம் பல

புகார்கள் வந்தபோது ஒரு தடவை கூடியது. அதற்கு தலைவர் வந்திருந்தும் மற்ற அங்கத்தினர்கள் வரவில்லை, அக்கறை காட்டவில்லை.

SRI M. KALYANASUNDARAM : ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினர்மீது புகார் செய்துள்ளார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சியில் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் கட்சியின்மீது புகார் செய்துள்ளது. ஆனால் திராவிட முன்னேற்ற கழகம் புகார் செய்தது என்று சொல்லுகிறதே தவிர கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி சொல்லவில்லை. காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் இதைப் பற்றி தகவல் இல்லை.

*Kudaganar Scheme*

*5 Q.—SRI M. KARUNANITHI : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கரூர் தாலுகா, வெள்ளியணைப் பகுதியில் குடகனாறு திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் துவக்கப்பட்டுள்ளனவா?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir. Only the detailed investigation of the scheme has been completed.

SRI M. KARUNANITHI : இந்தத் தொகுதியிலே திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் வெற்றிபெற்றிருந்ததால் இந்தத் திட்டம் வரவில்லை என்று அமைச்சர்கள் பிரசாரம் செய்தார்கள். இனிமேலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழி வகை செய்வார்களா?

THE HON. SRI V. RAMAIAH : அப்போது அந்த திட்டம் இன்வெஸ்டிகேஷனில் இருந்தது. இப்போது அந்த திட்டத்தைப் பற்றிய இன்வெஸ்டிகேஷன் முடிந்துவிட்டது. மேலும் இந்த விஷயத்தை பரிசீலனை செய்து அதற்கு வேண்டியதை செய்வார்கள்.

SRI V. S. S. MANI : குடகனாறு நதி எங்கிருந்து உற்பத்தியாகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

THE HON. SRI V. RAMAIAH : இதற்கு தனி கேள்வி போட வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : குடகனாறு நதித் திட்டம் திருச்சி ஜில்லாவிற்கு மட்டுமல்லாமல் மதுரை ஜில்லாவிற்கும் பொதுவானது. இந்தத் திட்டம் மதுரை ஜில்லாவிலேயுள்ள திண்டுக்கல் தாலுகாவிலுள்ள ஒரு பகுதிக்கும் பயன்படும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI V. RAMAIAH : இப்போது திண்டுக்கல் தாலுக்காவில் ஒரு அணைக்கட்டு கட்டுவது என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.